களைக் கேட்டால் 600 அடி தள்ளிப் போடுங்கள் என்று சொல்வார்கள். ஆனல், இப்போது சாடிலைட் மூலமாக அவர்கள் எலெக்ட்ரோ மாக்னடைஸ் வேவ்-ஐ வைத்துக் கொண்டு பூமிக்கு கீழே 5,000, 10,000 அடிகளுக்கு கீழே என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்கிருர்கள். எனவே, நாம் பூமிக்கு கீழே என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே, பூமிக்கு மேலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அடையாற்றின் கரைகள்.

* 750 வினு— திரு. எஸ். கணேசன்— மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அடிக்கடி ஏற்படும் வெள்ள அபாயத்தைத் தடுக்கும் பொருட்டு அடையாற்றின் கரையை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்,

(ஆ) பறங்கிமலை போரூர் பாலத்திலிருந்து அடையாறு பாலம் வரை அடையாற்றின் இருமருங்கிலும் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்துரு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அடையாறின் கரைகள் மிகவும் தாழ்வாகவும், வலுவு இல்லாததாகவும் இருப்பதால், மழை நேரத்தில் இந்தப் பகுதியிலே இருப்பவர்கள் பெரிதும் பீதிக்கு உள்ளாகின்ற நிலையிருக்கிறது. எனவே, இந்த அரசு இதை ஆராய்ந்து, இந்தத் திட்டத்தை மிகவும் விரைவாகச் செயல்படுத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த அடையாற்றிலே தண்ணீர் வருகிறபோதெல்லாம் கோட்டூர்புரம் பகுதி தண்ணீரில் மூழ்குகிறது என்பதைக் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். நானும் அதைப் போய்ப் பார்த்தேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்தக் கோட்டூர்புரம் பகுதியிலே கட்டப்பட்ட வீடுகள், இந்த அடையாற்றினுடைய நடு மையத்திலே இருக்கின்றது என்பதையும், இந்த அடையாற்றில் தண்ணீர் வராத காரணத்தால், சாதாரண நிலம்

1978 ஏப்ரல் 1]

என்று கருதி, அங்கே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. கரைகளை நாம் இருமருங்கிலும் கட்டினாலும், அதிலே இரண்டு அல்லது மூன்று பிளாக்குகள் இந்த அடையாற்றின் படுகையிலே இருப்பதால், வருகின்ற தண்ணீர் இயற்கையாகவே அதற்கான நீர்ப் பரப்பை அந்த இடத்திலே எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. தவறு எங்கே இருக்கிறதென்றால், தண்ணீர் வரக்கூடிய இடத்தில் வீடுகள் கட்டப்பட்டதாகும். எனவே, எவ்வளவு கரை போட்டாலும் ஆபத்து இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி விரிவாக ஆராய்ந்து பிறகு நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி, பாசனத் துறை பொறியாளர்களை அரசுக்கு அறிக்கை தரவேண்டுமென்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு அடையாற்றிலே கரைகள் கட்டப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால், தஞ்சை மாவட்டம் எப்போதும் வெள்ளம் வருகின்ற நேரத்தில் பாதிக்கப்படுகின்றது. எனவே கல்லணையின் கரைகளை விரிவுபடுத்தி, வெள்ளம் வராத அளவிற்குச் செய்வதற்கான முயற்சி அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் கல்லணை கட்டப்பட்டு, அதிலே உள்ள தண்ணீர் கொள்ளிடத்தில் விடப்படுகிறது,

திரு. ரெ. வீ. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் ஆறுகளின் இரண்டு கரைகளிலும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் முந்திய கேள்விக்குப் பதில் சொன்னதன் விளைவு, அது போய்க் கொண்டே இருக்கிறது. திரு. துரை கோவிந்தராஜன் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியைப் போட்டார்,

திரு. ரெ. வீ. சௌந்திரராஜன் : ஆறுகளின் இரண்டு பக்கங்களிலும் அந்தக் காலத்திலே கரைகள் போடப்பட்டு, ஆனால் பின்னர் அந்தக் கரைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி, கரைகளை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா: திரு. துரை கோவிந்தராஜன் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த அடிப்படையில் பேசுகிறீர்கள்?

திரு. எஸ். ஆர். இராதா: கேள்வியைப் பற்றிய பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்கள் துரை கோவிந்தராஜன் அவர்கள் கேள்வியைக் கேட்கத் தெரியாமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொல்லவில்லை. துரை கோவிந்தராஜன் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்த காரணத்தால் மூலக் கேள்வியிலிருந்து துணைக்கேள்வி வேறு எங்கோ செல்லுகிறது என்றுதான் நான் சொன்னேன். தாங்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை.

திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது கல்லணையில் மிகுதியாக உள்ள தண்ணீர் கொள்ளிடத்தில் விடப்படுவதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் அதற்கு மேல்புரத்தில் வென்ட்ராம்ப் இருந்தது. அது தற்போது செயல்படாத காரணத்தால் கிளிகூண்டில் உடைப்பு எடுத்தது. மீண்டும் திருத்தும் வகையில் 'வென்ட்' கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

கிருதமால் நதி சீரமைப்பு.

*751 வினா—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வைகை ஆற்றில் கட்டப்பட்டிருக்கும் விரகனூர் மதகு அணையுடன் கிருதமால் நதியை இணைத்து கிருதமால் நதியைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—(அ) ஆம்.

(ஆ) கொந்தகை கண்மாயை விரகனூர் ரெகுலேட்டர் இருக்கும் இடத்தில் வைகை ஆற்றுடன் இணைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதனால் கொந்தகை கண்மாயில் இருந்து வரும் உபரித் தண்ணீரை கிருதமால் ஆற்றில் கலக்கும் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 10 இலட்சம் ஆகும். இது வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.